**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.121/2025 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மாரிமுத்து | க–பெ/ த–பெ | முத்துக்குமார் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம் | |
| வயது: | : | 40/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆசிரியர் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.08.2026**

---------------------------------------------------------------------------------------------------

<u>03.08.2026</u>

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) எதற்காக எனது அக்கா பணம் கொடுக்காமல் நான் மட்டும் பணம் கொடுத்தேன் என்றால் எனக்கு தங்கமலர் அறிமுகம் என்பதால் நான் மற்றும் எனது அக்கா சேர்ந்துதான் கொடுத்தோம். இந்த விரபத்தை எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு ரூ. 45,00,000/– பணம் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சி.சி. 121/2025 ல் ரூ. 15,00,000/– மற்றும் சி.சி. 180/2025 ல் ரூ. 10,00,000/–மும் என மொத்தம் ரூ. 25,00,000/– மட்டுமே கேட்டு இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மீதி உள்ள ரூ.20,00,000/– எதிரியிடம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.20,00,000/– தனி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் காசோலை 597428 ரூ.15,00,000/–, 23.12.2024 ல் எதிரி கொடுத்து வைத்திருந்தார், காசோலை overwritting என்று வங்கியில் திருப்பியுடன் அதை பற்றி எதிரியிடம் கேட்டபின்பு மேற்கூறிய இரண்டு காசோலைகள் கொடுத்தார்.மீதி உள்ள ரூ. 5,00,000/– ரொக்கமாக தருவதாக கூறினார், ஆனால் தரவில்லை காசோலை 597428 ற்காக காரைக்குடி குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த விபரத்தை எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால்

சரிதான். 28.12.2024ல் எனது முகவரியில் வைத்து சமரச பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றாலும், அப்போது எதிரியிடம் இருந்து 2 காசோலைகள் பெற்றதாக இரண்டு வழக்கிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 09.04.2025ல் எதிரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் 23.04.2025ல் 3 காசோலைகள் பெற்றிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) எங்கு பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றால் எனது வீடு. இதை எனது புகாரில் குறிப்பாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காசோலை நான் எதிரியிடம் இருந்து பெற்றபோது யார் உடன் இருந்தார்கள் என்று எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அப்போது எனது அக்கா மற்றும் என் கணவர் இருந்தார். சென்னையில் உள்ள எதிரியின் வீட்டில் வைத்துதான் காசோலை பெற்றேன் என்றால் சரியல்ல. காசோலை எண் 597428 overwritting திருப்பப்பட்ட பின்னர் எதற்காக அதை எதிரியிடம் திருப்பி கொடுக்கவில்லை என்றால் எதிரியிடம் பணத்தை கேட்டபோது முடிந்ததை பார்த்துக்கொள் என்று கூறியதால் அதற்காக நீதிமன்றம் வந்தேன்.

3) எதிரியின் தாயார் காரைக்குடியில் மெஸ் வைத்துள்ளார் என்றால் சரிதான். எதிரியின் தோழி என்ற அடிப்படையில் அங்கு நான் சிறிது காலம் நிர்வாகம் செய்து வந்தேன் என்றால் சரியல்ல, எதிரியின் தாயார் முதியவர் என்பதால் அவருக்கு உதவியாக அங்கிருந்தேன். ே ஹாட்டலில் வரும் வருமானத்தை எதிரியின் தாயரின் வங்கி கணக்கிற்கு செலுத்தி வேலை பார்த்தேன் என்றால் சரியல்ல. எதிரியின் தாயாருக்கு கொடுத்த தொகையும் ரூ. 45,00,000/- ற்கு அடங்கும் என்றால் சரிதான். எதிரியின் தாயார் எந்த ஒரு தொகையும் பெறவில்லை என்றாலும், அவர் முதியவர் என்பதால் வழக்கில் சேர்த்தால் பயந்து பணத்தை தந்துவிடுவார் என்பதற்காக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 09.04.2025ல் எதிரி வழக்கறிஞர் மூலம் காசோலைகளை வங்கியில் செலுத்தவேண்டாம் என்றும், காசோலைகள் ரத்து செய்யப்பட்டது என்று கூறினார் என்றால் சரியல்ல, எதிரி பணம் கொடுத்துவிட்டார், அதனால் வங்கியில் செலுத்தவேண்டாம் என்று கூறியிருந்தார், ஆனால் எதிரி பணத்தை தரவில்லை. எதிரி அனுப்பிய அறிவிப்பு ம.சா.ஆ. 5 என்றால் சரிதான்.

ம.சா.ஆ.5 ற்கான rejoinder ம.சா.ஆ. 6 என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபருக்கு வங்கி மூலமாக பணம் அனுப்பினால் அது அவரது வங்கி கணக்கில் தெரியும் என்றால் சரிதான். எதிரி மற்றும் அவரது மகன் அஜய் வங்கி கணக்கில் இருந்து எனக்கு மற்றும் நான் கூறிய நபர்களுக்கு பணம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். மருத்துவ தேவைக்காக ரூ.10,000/- அனுப்பியுள்ளார். **(18.10.2022 முதல் 18.10.2023 வரையிலான தங்கமலரின் ஆக்சிஸ் வங்கி பரிவர்த்தனை எ.ம.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது.)** ரூ.45,00,000/- தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கல் நான் வாபஸ் வாங்கியதால் closer report கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதிக தொகை என்பதால் போலிஸ் லிமிட்டிற்கு வராது என்று கூறி வாபஸ் வாங்க சொன்னார்.

4) எதிரி ரூ. 25,00,000/- மட்டுமே என்னிடம் இருந்து பெற்றார் என்று அவரது அறிவிப்பில் ஒப்புக்கொண்டார். மற்றும்,அதற்கு அதிக படியான தொகை எதிரி பெற்றார் என்பதை காண்பிபதற்கு நான் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், என் வசம் உள்ளது, தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். நானும் எதிரியும் சேர்ந்து கூட்டு தொழில் செய்வதற்கு MOU நிறைவேற்றப்பட்டது என்றாலும், அதன் அசல் எனது வசம் உள்ளது என்றாலும் சரியல்ல. **( 18.08.2023 தேதியுடைய நகல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது. மற்றும் 23.08.2023 MOU வின் True copy எ.ம.சா.ஆ.3 ஆக குறியிடப்படுகிறது. (Mark with objection) )** எ.ம.சா.ஆ.3 ல் உள்ள கையொப்பம் எனது என்றால் சரியல்ல. கையொப்பத்தை ஒப்பிடுவதற்கு நிபுனருக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

5) எனது சகோதரியின் மகனுக்கு இந்தியன் ஏர்போர்சில் வேலை வாங்கி தருவதற்காக ரூ. 45,00,000/- கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் இடையே ரூ.25,00,000/- மட்டும் பரிவர்த்தனை நடைபெற்றது என்றாலும், தொழில் முதலீட்டிற்காக காசோலைகள் அனைத்து செக்யூரிட்டிக்காக எதிரி கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி ரூ.25,00,000/- வங்கி மூலம் மற்றும் ரொக்கமாக மற்றும் அதற்கான வட்டி சேர்த்து எனக்கு திருப்பி கொடுத்துவிட்டார் என்றாலும், செக்யூரிட்டிகாக கொடுத்து வைத்திருந்தாக காசோலைகளை வைத்து திருப்பி

எதிரிக்கு கொடுக்காமல் உண்மையான சங்கதிகள் மற்றும் ஆவணங்களை மறைத்து சட்ட பூர்வமான கடனை இருப்பதாக பிணையம் செய்து எதிரியிடம் இருந்து சட்டத்திற்கு முரணாக பணம் பெறவேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.08.03 18:26:43 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.